# ஊடக அறிக்கை

2011 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய பொது நீதிமன்றத்தில் எல்.ரீ.ரீ.ஈ இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பெறுபேறு தொட ர்பாக அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் பற்றி வெளிவிவகார அமைச்சு வியப்படைந்துள்ளது. இதன் போது ஐரோப்பிய ஒன்றியம் பிரதிவாதியாக இருந்ததுடன் , தலையீடு செய்யும் தரப்பினாகளாக நெதா லாந்து இராச்சியம் , ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியும் கிடைத்துள்ளது. இது தொட ர்பாக ஆ ர்வங்கொண்ட தரப்பினர்களினால் வெளியிடப்பட்டுள்ள இக்கூற்றுக்கள் போலியான வாதங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட ஆரம்பம் முதலே ஐரோப்பிய ஒன்றிய முறைமை மற்றும் விசேட ஐரோப்பிய சட்டத்தரணிகளிடமிருந்து சட்ட ஆலோசனைகளும் நிபுணத்துவக் கருத்துக்களும் நாடப்பட்டுள்ளதையும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது. அதன் பிரகாரம் இலங்கை அரசாங்கம் முறையான அடிப்படையிலும் , உண்மையாகவும் , பிரதிவாதிகளுக்கும் இடையீட்டுத் தரப்பினர்களும் முக்கியமான தன்மையிலான விடயங்களை வழங்கி மிகவும் வினைத்திறன்மிக்கதாக நடவடிக்கைகளை எடுத்தது. இலங்கையானது , ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடல்ல என்பதனால் , ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் தலையீடு செய்வதற்கு ஏற்றவகையில், இலங்கையின் தேசிய நலனுக்கு முரணாக விசேட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருந்தமையினால் இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் . எல்.ரீ.ரீ.ஈ இன் கோ ரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உதவும் பொருட்டு ஏற்புடைய சகல தகவல்களையும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வழங்கியுள்ளது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதிலிருந்து நி ர்ணயிக்கப்பட்ட காலப்பி ரிவு ஒன் றிற்குள் பிரதிவாதியும் இடையீட்டு தரப்பின ர்களும் மேன்முறையீட்டு நடவடிக்கையொன்றை முன்னெடுக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளன ர்.

எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்தவரையில் , பெயரிடப்பட்ட தரப்புக்கள் புதிய வரையறைக்குட்பட்ட ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுதல் , ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளினால் தேசிய ரீதியான நடவடிக்கைகள் போன்றவற்றுக்கான தெரிவுகளைக் கொண்டுள்ளன. இலங்கை அரசாங்கமானது எஞ்சிய எல் .ரீ.ரீ.ஈ. தரப்பின ர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கப்பம்பெறல் ஊடாக இலங்கைப் பிரஜைகளை அச்சுறுத்துவதிலிருந்து விடுவித்துக் கொள்ளல் மற்றும் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவெடுப்பதற்குள்ள வாய்ப்புக்களைத் தடுக்கும் அபிலாசையுடன் இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட மேற்படி தரப்பின ர்களுக்கு ஏற்கனவே உதவி வழங்கி வருவதுடன், அவ ர்கள் இது தொட ர்பாக எதி ர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் தொடா ்ச்சியாக உதவி வழங்கும். இதனை உச்சளவில் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமாக அரசாங்கம் கருதுகின்றது.

வெளிவிவகார அமைச்சு

கொழும்பு

2014 ஒக்டோபர் 22ஆம் திகதி